## அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம்

நாள்:08.09.2017

08.09.2017 அன்று இக்கல்லூரியில் நடைபெற உள்ள தன்னாட்சி நிதிக் குழுக் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பொருள்களின் தொகுப்பு கல்லூரி தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரால் பணிந்து வைக்கப்படுகிறது.

| வ. எண்: | பொருள் | நிதிக்குழுவினரால் எடுக்கப்பட்ட தீர்மானம். |
|---|---|---|
| 1 ✓ | 2016–17 ஆண்டு தேர்வு நிதி வரவு மற்றும் செலவு குழுவின் (2019-20) பார்வைக்கு வைக்கப்படுகிறது. | பார்வையிடப்பட்டது. |
| 2 ✓ | 2016–17 ஆம் ஆண்டு தன்னாட்சி நிதி பெறப்படவில்லை என்பது (2018-19) குறித்து பரிசீலனை செய்தல். | தொடர் நடவடிக்கை எடுக்கவும். |
| 3 ✓ | தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஆகஸ்ட் 2015–ல் ஊதியம் உயர்த்தி வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு – 2016 ஊதியம் உயர்த்தி வழங்கப்படவில்லை. தற்போதைய விலைவாசி உயர்வு, பொருளாதார நிலைமை மற்றும் GST வரியைக் கருத்தில் கொண்டு அலுவலகப் பணியாளர்கள் ஊதியத்தை உயர்த்தி வழங்குமாறு விண்ணப்பங்கள் அளித்துள்ளனர். எனவே ஊதியத்தை உயர்த்தி வழங்குவது குறித்து பரிசீலனை செய்தல். | பட்டியலில் உள்ளபடி ஊதிய உயர்வு வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டது. செப்டம்பர்–2017 முதல் நடைமுறை படுத்தப்படும். |
| 4 | பருவத் தேர்வுகள் நடைபெறும் போது கழிவறை சுத்தம் செய்பவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதிய தொகை காலை (FN) ஒரு நபருக்கு ரூ50/- , மதியம் (AN) ஒரு நபருக்கு ரூ.50/- வீதம் நாள் ஒன்றுக்கு ரூ.100/- வழங்கப்பட்டு வந்தது. மாணவியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் கழிவறை சுத்தமாக இருப்பது இல்லை. மேலும் ஒரே பணியாளரால் கழிவறையை சுத்தம் செய்வது கடினமாக உள்ளது. எனவே ஏப்ரல் 2017–ல் நடைபெற்று முடிந்த பருவத் தேர்வில் 500 மாணவியர்க்கு ஒரு நபர் வீதம் மாற்றி அமைக்கப்பட்டு மதிப்பூதியம் வழங்கப்பட்டது. அதற்கான அனுமதி வேண்டுதல். | அனுமதியளிக்கப்பட்டது. |

| வ. எண்: | பொருள் | நிதிக்குழுவி எடுக்கப்பட்ட தீ |
|---|---|---|
| 5 | மையமதிப்பீட்டுப்பணி நடைபெறும்போது இரண்டு கணினி இயக்குபவர்களுக்கு மட்டுமே மதிப்பூதியம் வழங்கப்பட்டது. தற்போது மாணவிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ள காரணத்தாலும், மையமதிப்பீட்டுப்பணி நடைபெறும்போது மதிப்பெண் நேரடியாக கணினியில் ஏற்றப்பட்டு Folio தாளில் அச்சிடப்பட்டு, சரிபார்க்கப்பட்டு தேர்வுத் தாள் திருத்தும் தேர்வாளர்களுக்கு வழங்கப்படுவதாலும் வேலை பளுவின் காரணமாக இரண்டு கணினி இயக்குபவர்களுக்குப் பதிலாக ஏப்ரல் 2017–ல் நடைபெற்ற மையமதிப்பீட்டுப்பணியில் நான்கு கணினி இயக்குபவர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு மதிப்பூதியம் வழங்கப்பட்டது. எனவே அதற்கான அனுமதி வேண்டுதல். | அனுமதி வழங்கப் |

நிதிக் குழு உறுப்பினர்கள் : கையொப்பம்

1. முனைவர் K. மனோகரன் – கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
2. முனைவர் P. ஹேமலதா – முதல்வர் (பொறுப்பு) — 08/09/17
3. முனைவர் S. அகிலா – தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் — 08/09/17
4. திருமதி. T. அல்லி – இயற்பியல் துறைத் தலைவர் — 8.9.17
5. திருமதி. V. லெட்சுமி – பொருளியல் துறைத் தலைவர் — 8/9/17
6. திரு. இராமகிருஷ்ணன் – பட்டயக் கணக்கர்